செ.வெ.எண்:18/ஜனவரி நாள்:13.01.2016.

## இராமநாதபுரம் மாவட்டம்

## 27-ஆவது சாலைப் பாதுகாப்பு வாரவிழாவினை முன்னிட்டு தலைக்கவச விழிப்புணர்வு பேரணியை

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்

இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து 27-ஆவது சாலைப் பாதுகாப்பு வாரவிழாவினை முன்னிட்டு போக்குவரத்துத் துறையின் சார்பாக தலைக்கவச விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.01.2016) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அந்தவகையில், சாலைப் பயணங்களின் போது பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் தங்களின் பயணத்தை மேற்கொள்ளும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் ஆண்டுதோறும் சாலைப்பாதுகாப்பு வார விழா நடத்தப்பட்டு வருகிறது. தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் 11.01.2016 முதல் 16.01.2016 வரையிலான 7 நாட்கள் சாலைப்பாதுகாப்பு வாரவிழாவாக கடைப்பிடிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் கல்லூரி மாணவ, மாணவிகள், ஓட்டுநர்கள், பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றைய தின நிகழ்வாக இருசக்கர வாகன ஓட்டுநர் மற்றும் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பவர்களுக்கு தலைக்கவசத்தின் அவசியத்தை உணர்த்தும் விதமாக தலைக்கவசம் அணிந்து கொண்டு காவலர்கள், வாகன முகவர்கள், ஓட்டுநர்கள், கல்லூரி மாணவர்கள் உள்பட சுமார் 400-க்கு மேற்பட்டவர்களைக் கொண்டு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கப்பட்டு பட்டிணம்காத்தான் பேருந்து நிலையம் வரை பொதுமக்கள் அதிகம் கூடும் வீதிகள் வழியாக சென்று மண்டல போக்குவரத்து அலுவலகத்தில் சென்று முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து இணை ஆணையர் பி.முருகானந்தம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.இன்பமணி, உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஜே.சேக்முகமது, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.அசோக்குமார், திரு.மாணிக்கம், போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.முத்துராமலிங்கம், காவலர்கள், ஓட்டுநர்கள், கல்லூரி மாணவர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தோர் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**